**நீர் வளச் சபை - 2015**

-------------------------------------------

நீர் வளச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வள அதிகாரச்சட்டத்தின் 17(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

-----------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நீர் வளச் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம்

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 07 இன் பிரகாரம் சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு அச் சொத்தினை பயன்படுத்துவதற்கு தயாரான நிலையிலிருந்த பின்னரே ஆரம்பிக்கப்பட முடியுமாக இருந்த போதிலும், சபையினால் சொத்துக்கள் கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டிற்காக பெறுமானத்தேய்வு செய்யப்படாமலும், அகற்றப்படுகின்ற ஆண்டின் போது முழு ஆண்டிற்காகவும் பெறுமானத் தேய்வு செய்யும் அடிப்படை பின்பற்றப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது பொதுத் திறைசேரியாலும் 2013 ஆம் ஆண்டின் போது இலங்கை இராணுவத்திலிருந்தும் நீர்வள செயலகத்தாலும் நன்கொடையளிக்கப்பட்ட 06 வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2006 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பை கணிப்பீடு செய்யும் போது வாழ்க்கைச் செலவினப்படி கணிப்பிடப்படாமையின் காரணமாக பங்களிப்புப் பணம் ரூபா 25,268,406 மற்றும் மிகைக்கட்டணம் ரூபா 12,634,203 தொகை செலுத்த வேண்டியிருந்தமை மீளாய்வாண்டின் போது இனங்காணப்பட்டிருந்த போதிலும், அப்பொறுப்புக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

ரூபா 12,350,395 கூட்டுத்தொகையான கடன்பட்டோர் மற்றும் சேவை முற்பணங்களுக்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3.835,577 தொகையான கடன்பட்டோர் மீதிகளில் 3 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 212,836 ஆக

இருந்த போதிலும், அந்த மீதியை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 2,707,906 சேவை முற்பணங்கள் பெறப்பட்டு ஒரு வருடங்களிற்கு மேல் கடந்திருந்த போதிலும், உரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும், உரிய பணிகள் நிறைவேற்றப்பட்டு ரூபா 96,432 முற்பணத்தை தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1964 இன் 29 ஆம் இலக்க நீர் வள சபை அதிகாரச்சட்டம் மற்றும் 1999 இன் 42 ஆம் இலக்க திருத்த அதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் 14(3) ஆம் பிரிவுகள் | அதிகாரச் சட்டத்தில் காண்பிக்கப்பட்டுள்ள ஏதாவது விடயமொன்று அல்லது சகல விடயங்களும் தொடர்பான மீதி மதியுரைக் குழுவினால் சபைக்கு ஆலோசனை வழங்க வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் போது சபையின் ஆலோசனைக் கூட்டம் நடைபெறவில்லை. மேலும், மீளாய்வாண்டின் நடைபெற்ற 11 ஆராய்ச்சி கற்கைகள் தொடர்பான குழுவின் ஆலோசனைக்காக அது கவனத்திற்குக் கொண்டுவரப்படாதிருந்ததுடன் அதற்காக செலவிடப்பட்ட ரூபா 27,896,000 தொகையான ஆராய்ச்சி செலவினம் நீர்வளச் சபை அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் மதியுரைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | ரூபா 899,569,000 கூட்டுத்தொகையான நடைமுறையல்லாச் சொத்துக்களுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.7 ஆம் பந்தி | திறைசேரி செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாமல் சபையின் 29 உத்தியோகத்தருக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 2.229,667 தொகையும் முன்னைய ஆண்டின் போது 17 உத்தியோகத்தருக்கு ரூபா 2,229,667 தொகையும் விஷேட படியாகச் செலுத்தப்பட்டிருந்தன. |

**3. நிதிசார் மீளாய்வு**

**3.1 நிதிசார் விளைவுகள்**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் பற்றாக்குறை ரூபா 99,400,000 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 39,063,000 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் பற்றாக்குறையில் ரூபா 60,337,000 இனால் ஆன அதிகரிப்பைக் காட்டுகின்றது. மொத்தச் செலவினம் ரூபா 107,711,100 இனால் அதிகரித்தமையும் செயற்பாட்டு நடவடிக்கைகலிருந்து பெற்ற வருமானம் ரூபா 9,935,000 இனால் குறைவடைந்தமையும் பற்றாக்குறை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாக இருந்தது.

மீளாய்வாண்டினதும் கடந்த 04 ஆண்டுகளினதும் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை நிதி விளைவுகளில் பற்றாக்குறையை காணக் கூடியதாக இருந்தது. எவ்வாறாயினும், ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத் தேய்வு என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது 2011 ஆம் ஆண்டில் ரூபா 97,199,000 தொகையான சபையின் பங்களிப்பு, தொடர்ச்சியாக பல மடங்காக அதிகரித்து மீளாய்வாண்டில் ரூபா 158,170,000 ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

**(அ) நோக்கங்களை நிறைவேற்றுதல்**

1999 இன் 42 ஆம் இலக்க நீர் வளச் சபை (திருத்த) அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் இலக்க பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள சபையின் நோக்கங்கள் பின்வருமாறு,

(i) நாட்டில் நீர் வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் பயன்படுத்துதல் என்பவற்றை உள்ளடக்கி அவற்றை கட்டுப்படுத்துதல், முறைமைப்படுத்தல், அபிவிருத்தி செய்தல் மற்றும் நீர் வழிகள் அசுத்தமடைவதைத் தவிர்த்தல்

(ii) நீர் வளத்தை பல் நோக்காக அபிவிருத்தி செய்து மற்றும் பயன்படுத்துதல், வீட்டு நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழில் நடவடிக்கைகளுக்காக குறுங்கால மற்றும் நீண்ட காலரீதியில் நீர் வளத்தை வழங்குதல், வறட்சியைக் கட்டுப்படுத்தல், மற்றும் சமனான நோக்கங்களில் நாட்டின் நீர் வளத்தைப் பராமரித்தல் மற்றும் பயன்பாடு தொடர்பாக தேசிய கொள்கையைத் தயாரித்தல்.

(iii) நாட்டில் நிலக்கீழ் நீர் வளம் தொடர்பாக அரசாங்க நிறுவனங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற புலனாய்வுகள், புள்ளிவிபரரீதியான மெய்மையாய்வு, திட்டமிடல் மற்றும் முன்மொழிவின் அடிப்படையிலான அறிக்கைகளைப் பகுப்பாய்வு செய்தல்.

(iv) நிலக்கீழ் நீரை சரியாக நிர்வகிப்பது மற்றும் பொருளாதார ரீதியான பயன்பாட்டிற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற ஏனைய எந்தவொரு பொருத்தமான நடவடிக்கைகளையும் எடுத்தல்.

மேற்கூறப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக சபையினால் போதியளவான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கான வருடாந்த மதிப்பீட்டின் மூலம் 13 விடயங்களின் கீழ் 6206 அலகுகளுக்குரிய ஆராய்ச்சி கற்கைகளை நிறைவேற்றுவதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும், செயல்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் சபையினால் 2808 அலகுகள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் நிறைவேற்றப்படாத திட்டங்கள் 16 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது.

(இ) ஆராய்ச்சி கற்கைகளை அமுல்படுத்தலில் குறைபாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2010 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரை நீர் தொடர்பான தரம் மற்றும் அதனால் பொது மக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை பரீட்சிப்பதற்காக ரூபா 410,181,400 மதிப்பீட்டுக் கிரயத்தில் 11 ஆராய்ச்சிக் கற்கை செயற்திட்டங்கள்

ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அத் தொகையில் ரூபா 84,403,529 தொகை செலவிடப்பட்டிருந்தது. இதில் 09 கற்கைகள் செயற்திட்டங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அந்த 09 செயற்திட்டங்களும் எதிர்பார்த்த பிரகாரம் பூர்த்தி செய்வதற்கு முடியாமையினால் செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை.

(ii) ஆராய்ச்சி கற்கைகளுக்காக பொறுப்புக் கூறுகின்ற உத்தியோகத்தர்களின் முன்னைய ஆராய்ச்சி அனுபவங்கள் மற்றும் அவர்களின் கல்விசார் மற்றும் தொழில் தகைமைகள் ஆராய்ச்சி முன்மொழிவில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் அந்த ஆராய்ச்சிக் கற்கையொன்றும் அந்த ஆராய்ச்சிச் செயற்பாடு தொடர்பாக திறன் மற்றும் அனுபவங்கள் ஆராய்ச்சியாளரின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை.

(iii) ஆராய்ச்சி கற்கைகளை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்காக முழு நேர ஆராய்ச்சி உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் சகல ஆராய்ச்சி கற்கைகளுக்காகவும் ஆராய்ச்சி உத்தியோகத்தராக சபையின் பொது முகாமையாளர் நியமிக்கப்பட்டிருந்தார் அவரின் பொதுவான கடமைகளுக்கு மேலதிகமாக ஆராய்ச்சி கற்கைகளுக்காக ஈடுபடுத்த வேண்டியிருந்தமையால் திட்டமிடப்பட்ட காலப்பகுதியில் ஆராய்ச்சி கற்கைகளைப் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது.

(iv) மீளாய்வாண்டின் போது ஆராய்ச்சிக் கற்கைகளுக்காக திறைசேரியினால் ஒதுக்கப்பட்ட நிதி எற்பாடுகளிலிருந்து ரூபா 246,161 தொகை சபையின் செலவினங்களுக்காக செலவிடப்பட்டிருந்தது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 வருட கட்டாய சேவைக் காலம் மற்றும் ரூபா 1,308,699 தொகையான பிணை முறியின் கீழ் 2005 ஆம் ஆண்டின் போது புலமைப்பரிசில் பெற்று வெளிநாடு சென்ற பூகோள விஞ்ஞானியொருவர் புலமைப்பரிசிலின் பின்னர் உடன்படிக்கை செய்யப்பட்ட கால எல்லையை பூர்த்தி செய்வதற்கு முன் 04 வருட கால கட்டாய சேவைக் காலத்திற்கும் ரூபா 435,600 பிணை முறியினதும் கீழ் ஏனைய நிறுவனமொன்றிற்கு விடுவிக்கப்பட்டிருந்தார். பெண் உத்தியோகத்தர் கைச்சாத்திட்ட 02 உடன்படிக்கைகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்காதிருக்கும் போது 2011 ஆம் ஆண்டு முதல் சபையின் ஊழியர்கள் நிரந்தரமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 1,744,299 தொகையான பிணைப் பணத்தை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கரம்ப குடிநீர் செயற்திட்டத்தின் கீழ் குழாய்க் கிணறை நிர்மாணிப்பதற்காக 2006 ஆம் ஆண்டின் போது கற்பிட்டி பிரதேச செயலாளரினால் சபைக்கு ரூபா 1,751,358 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இருந்த போதிலும் நிர்மாணிக்கப்பட்ட குழாய்க் கிணறுகளில் நீர் அதிக உவர் தன்மையுடையதன் காரணமாக சபையினால் பெறப்பட்ட முற்பணத்திலிருந்து அப் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 03 குழாய்க் கிணறுகளுக்கு பம்பி பரீட்சிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 536,130 தொகை குறைக்கப்பட்டு எஞ்சிய ரூபா 1,215,228 தொகையை மீண்டும் வழங்குவதற்கு சபையின் செயற்பாட்டு முகாமையாளர் இணங்கியிருந்தார். எனினும், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தத் தொகையை கற்பிட்டி பிரதேச செயலாளருக்கு மீளச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற இறுதியிருப்பில் ரூபா 66,956,871 பெறுமதியான பயன்படுத்தப்படாத மற்றும் அசைவுறாத களஞ்சியப் பொருள்கள் காணப்படுவதாக 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளின் மெய்மையாய்வு சபை அறிக்கையிலிருந்து இனங்காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.4 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 365 பேராக இருந்த போதிலும், 2016 சனவரி 19 ஆந் திகதிய (ஐசம/அவி/32-2016 ஆம் இலக்க தலைவரின் கடிதத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 380 ஆக இருந்தமை கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை விஞ்சி 15 பேர்கள் மேலதிகமாகச் சேர்க்கப்பட்டிருந்தனா.

(ஆ) நீர் வளச் சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறைகளுக்கு முரணாக 2015 ஆம் ஆண்டின் போது 34 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்தனா. அந்த ஊழியர்களின் ஆளணிக் கோவையினை பரீட்சித்த போது பதவிக்குரிய தொழில் அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படாத 06 சந்தர்ப்பங்களும், சாரதி பதவிகளுக்கு ஆட்சேர்க்கும் போது தேவையான தகைமையைக் காணப்படாத 02 சந்தர்ப்பங்களும், வைத்திய சான்றிதழ் சமர்ப்பிக்கப்படாத 06 சந்தர்ப்பங்களும் காணப்பட்டதுடன் கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள் உண்மையென உறுதிப்படுத்தப்பட்டிருக்கவும் இல்லை.

(இ) ஆட்சேர்ப்பு நடைமுறைகளுக்கு முரணாக வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை நடாத்தப்பட்டாமல் சபையில் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற சகல ஊழியர்களுக்கும் சம்பள அதிகரிப்பு மற்றும் பதவியுயர்வுகள் வழங்கப்பட்டிருந்தன.

**4.5 முறையான பிரகாரம் கையேற்கப்படாத சொத்துக்கள்**

சபையின் தலைமை அலுவலகம், இறத்மலானை மற்றும் வவுனியா வேலைத்தளங்கள் மற்றும் அனுராதபுரம் சுற்றுலா விடுதி அமைந்துள்ள காணி மற்றும் கட்டிடங்கள் என்பவற்றை சபையால் கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அந்த காணியில் புதிய கட்டிட நிர்மாணம் மற்றும் காணப்படுகின்ற கட்டிடங்களை நவீனமயப்படுத்தலும் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**4.6 ஏனைய அரசாங்க நிறுவகங்களுக்கு வழங்கப்பட்ட சபையின் வளங்கள்**

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 8.3.9 ஆம் பிரிரிவிற்கு முரணாக சபையின் பணிப்பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக சேர்க்கப்பட்ட நிர்வாக முகாமையாளர் (ஒப்பந்த), தொழில்நுட்ப உத்தியோகத்தர், தொழிலாளர், சாரதி, இரண்டு அலுவலக உதவியாளர்கள் என்போரை உள்ளடக்கிய 06 பேர்களைக் கொண்ட பதவியணியினரொன்று நீர் வளச் சபையின் பணிகளுக்குப் புறம்பாக ஏனைய அரசாங்க நிறுவனங்களில் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது அந்த ஊழியர்களுக்குச் செலுத்தப்பட்ட ரூபா 816,897 தொகையான சம்பளம் மற்றும் படிகள் சபையின் மூலம் செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் தொழில்நுட்ப மற்றும் பொறியியல் வடிவமைப்பு முறைமைகள் பயன்படுத்தப்படுகின்ற சபையின் பணிகளைக் கணக்காய்வு செய்வதற்கு தகைமைபெற்ற உத்தியோகத்தர்கள் போதியளவான எண்ணிக்கையில் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாதிடப்பட்ட வருமானத்தையும் செலவினத்தையும் உள்ளபடியான வருமானத்துடனும் செலவினத்துடனும் ஒப்பீடு செய்த போது 176 விடயங்களில் 20 சதவீதம் முதல் 810 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) பாதீடு தயாரிக்கும் பொது சுன்னாகம் (Chunnakam) செயற்திட்டத்தின் வருமானம் இனங்காணப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,800,000 வருமானமொன்று அதன் மூலம் பெறப்பட்டிருந்தது.

### 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் ஆண்டறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆண்டறிக்கை 2016 யூலை 31 ஆந் திகதி வரையிலும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டிலான குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமை மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை, சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஆ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு | எதிர்பார்த்த பிரகாரம் நிதி மற்றும் பௌதீக செயலாற்றலை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்காமை, திட்டமிடப்பட்ட பிரகாரம் ஆராய்ச்சி கற்கைகளை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமை |

| | | |
|---|---|---|
| (இ) | கடன்கொடுத்தோர் மற்றும் கடன்பட்டோர் கட்டுப்பாடு | தீர்த்து வைப்பதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | நடைமுறையல்லாச் சொத்துக்களை பதிவதற்கு நடவடிக்கை எடுக்காமை |